**அ.வ.எண்: 20/2018 நாள்: 12.11.2025**

வா.சா.1 – ரேவதி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின்ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>**வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:**</u>

1. 23.05.1994 தேதிய வாதியின் மாமியாரான மாரியாயி தனதுமகனான சின்னையாவுக்காக வழக்குச் சொத்துள்ளிட்ட 43 சென்ட் சொத்தை கார்டியன் ஸ்தானத்தில் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் – அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 29.12.1917 தேதிய வழக்குச் சொத்துள்ளிட்ட 43 சென்ட் சொத்தினை வாதிக்கும் அவரது கணவர் சின்னையா எழுதிக் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் – அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 13.09.1987 தேதிய வழக்குச் சொத்துள்ளிட்ட மொத்தச் சொத்தான 43 சென்ட் சொத்தின் முன்பாத்தியஸ்தர் பெயருக்கு ஏற்பட்டுள்ள பட்டா மாறுதல் உத்திரவு – அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 02.04.1994 தேதிய வழக்குச் சொத்துள்ளிட்ட மொத்தச் சொத்திற்கு வழங்கப்பட்ட அ பதிவேடு – அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 21.10.1995 தேதிய வழக்குச் சொத்துள்ளிட்ட மொத்தச் சொத்திற்குரிய பட்டா மாறுதல் உத்திரவு – அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. வழக்குச் சொத்துள்ளிட்ட மொத்தம் 43 சென்ட் சொத்திற்கான பட்டா – அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. 11.12.2017 தேதிய வழக்குச் சொத்திற்கு வழங்கப்பட்ட வில்லங்கச் சான்று, நான்குமால் சான்று மற்றும் சர்வே எண்.144–ன் புலப்படம் – அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. வழக்குச் சொத்திற்கு அருகில் உள்ள சேர்க்கைச் சொத்தில் உள்ள வாதியின் வீட்டிற்குரிய வீட்டுவரி ரசீது – அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
9. வாதியின் வீட்டிற்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்பிற்குரிய கட்டணம் செலுத்தியதற்கான ரசீது – அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
10. மின்கட்டண ரசீது –அசல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
11. வழக்குச் சொத்துள்ளிட்ட சேர்க்கை சொத்து அமைந்துள்ள புல எண்.144/12 னை வாதியின் கணவர் கொடுத்த மனுவின்பேரில் அரசு நில அளவையர் அளந்து கொடுத்துள்ளார் என்பதற்காக வட்டாட்சியர் கொடுத்த குறிப்பாணை – அசல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12.வாதியின் ஆதார் அட்டை – நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13.வழக்குச் சொத்து குறித்து அரசால் வழங்கப்பட்ட நமூனா – அசல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.12 15:31:25 +0530